மோட்டார் வாகன விபத்து இழப்பீடு கோருரிமை தீர்ப்பாயம்
மோட்டார் வாகன விபத்து வழக்குகள்
சிறப்பு சார்பு நீதிமன்றம் எண்: I, விழுப்புரம்

முன்னிலை : **திரு. N.**வெங்கடேசன், **D.C.BA.,M.L.,P.G.D.C.L.C.F.,**
சிறப்பு சார்பு நீதிபதி எண்.1
சிறப்பு சார்பு நீதிமன்றம் எண்.1,
(மோட்டார் வாகன விபத்து இழப்பீடு கோருரிமை வழக்கு)
விழுப்புரம்.

2026 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 28 ஆம் நாள் செவ்வாய்க்கிழமை.

MCOP.No.28/2023
(CNR.No.TNVP07-000530-2022)

மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் Tr.CMP.No.264 முதல் 281/2020 மனுக்களில் 11.05.2020 தேதியில் பிறப்பித்த தீர்ப்பின் வழிகாட்டுதலின் அடிப்படையில் பிறப்பிக்கபடும் உத்தரவு படிவம்:

(1)	மனுதாரர் முகவரி	தனலக்ஷ்மி த/பெ ஆறுமுகம், வயது 19, எண்.76/1, மாரியம்மன் கோயில் தெரு, பள்ளிநேலியனூர், விழுப்புரம் தாலுக்கா மற்றும் மாவட்டம்.
(2)	1 ஆம் எதிர்மனுதாரரின் பெயர் மற்றும் முகவரி:	கோதண்டராமன், எண்.5, மெயின் ரோடு, சிவராந்தகம், கீழூர், பாண்டிச்சேரி.
(3)	2 ஆம் எதிர்மனுதாரரின் பெயர் மற்றும் காப்பீடு நிறுவனத்தின் முகவரி:	கிளை மேலாளர், ராயல் சுந்தரம் ஜென்ரல் இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட், எண்.1, க்ளப் ஹவுஸ் ரோடு, 2 வது தளம், சுப்ரமணியன் பில்டிங், அண்ணா சாலை, சென்னை.
(4)	இழப்பீடு கோரிக்கை மனு தாக்கல் செய்த தேதி	30.09.2022 மற்றும் 09.11.2022
(5)	உத்தரவு பிறப்பிக்கப்பட்ட தேதி	28.07.2026

N VENKATESAN
Digitally signed by N VENKATESAN
Date: 2026.07.30 17:34:38 +0530

(6)	பிறப்பிக்கப்பட்ட இழப்பீட்டு தொகை விபரம்	ரூ.2,17,000/- (ரூபாய் இரண்டு இலட்சத்து பதினேழாயிரம் மட்டும்)
(7)	இழப்பீடு செலுத்த வேண்டிய எதிர்மனுதாரர்	மனுதாரருக்கு, 2ம் எதிர்மனுதாரர் இழப்பீட்டுத் தொகை செலுத்த வேண்டும் என உத்தரவிடப்படுகின்றது.
(8)	வட்டி விகிதம்	ஆண்டிற்கு 7.5% 30.09.2022 மற்றும் 09.11.2022 தேதி முதல் தொகை செலுத்தும் தேதி வரை
(9)	இழப்பீடு தொகை வைப்பீடு மற்றும் வழங்குதல்	NEFT அல்லது RTGS ஆகிய E-Transfer முறையில்
(10)	வழக்கறிஞர் ஊதியம் மற்றும் வழக்கு செலவுத்தொகை	வழக்கறிஞர் கட்டணம் ரூ.14,350/-, மனுதாரர் செலுத்திய நீதிமன்றக்கட்டணம் ரூ.373/- மற்றும் வழக்கு செலவுத் தொகை ரூ.109/- ஆகமொத்தம் ரூ.14,832/-ஐ 2ம் எதிர்மனுதாரர் மனுதாரருக்கு செலுத்த வேண்டும் என்றும் உத்தரவிடப்படுகிறது.
(11)	மனு மீது செலுத்தப்பட்ட நீதிமன்றக்கட்டணம்	மனுதாரர் செலுத்தவேண்டிய மொத்த நீதிமன்ற கட்டணம் ரூ.1,543/- மனுதாரர் நீதிமன்றக் கட்டணமாக ரூ.373/- செலுத்தியுள்ளார். மனுதாரர் செலுத்தவேண்டிய இழப்பீடு தொகைக்குரிய குறைவு நீதிமன்றக்கட்டணம் ரூ.1,170/- ஆகும். மனுதாரர் செலுத்த வேண்டிய குறைவு நீதிமன்றக் கட்டணம் ரூ.1,170/-ஐ 2ம் எதிர்மனுதாரர் தீர்ப்பு வழங்கப்பட்ட நாளிலிருந்து 15 நாட்களுக்கு E-Court fees link pay.ecourts.gov.in என்ற இணையதளத்தின் மூலம் செலுத்த வேண்டுமென உத்தரவிடப்படுகிறது.

N VENKATESAN

Digitally signed by N VENKATESAN
Date: 2026.07.30 17:34:55 +0530

இம்மனுக்களானது கடந்த 21.07.2026 ஆம் தேதியன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.பி.ரமேஷ், அவர்கள் முன்னிலையாகியும், 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.ஏ.பரதன், அவர்கள் ஆஜராகியும், 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.ஆர்.ரவிக்குமார், அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரைகள் கேட்டறிந்தும், ஆவணங்களைப் பரிசீலனை செய்தும் இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் சீரான பரிசீலனையிலிருந்து வந்து, இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.

உத்தரவு

22.08.2021 ஆம் தேதியன்று ஏற்பட்ட சாலை விபத்தில் மனுதாரருக்கு ஏற்பட்ட காயங்களுக்காக ரூ.10,00,000/- இழப்பீடு கோரி இம்மனு மனுதாரரால் எதிர்மனுதாரர்கள் மீது மோட்டார் வாகனங்கள் சட்டம் பிரிவு 166(1)-ன்கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **மனுவின் சுருக்கம் :-**

கடந்த 22.08.2021ம் தேதியன்று இரவு சுமார் 9.15 மணியளவில் மனுதாரர் தனலக்ஷ்மி என்பவரும், மனுதாரரின் சகோதரியான சுஷ்மிதா என்பவரும் சாலையோரமாக PY-05-5265 என்ற எண்கொண்ட இருசக்கர மோட்டார் சைக்கிள் வாகனத்துடன் விழுப்புரம்-பாண்டிச்சேரி சாலையில் திருபுவனை அருகில் நின்றுக்கொண்டிருந்தபோது அச்சமயம் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி வந்துக்கொண்டிருந்த 1ஆம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான PY056X7525 என்ற பதிவெண் கொண்ட கார் வாகனத்தை அதன் ஓட்டுநர் அதிவேகமாகவும், அஜாக்ரதையாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டிவந்து மனுதாரர் மீது மோதி விபத்து ஏற்பட்டது. விபத்தில் மனுதாருக்கு எலும்பு முறிவும் மற்றும் உடல் முழுவதும் பலத்த காயங்களும் ஏற்பட்டது. விபத்து ஏற்பட்டவுடன் மனுதாரர் விழுப்புரம், முண்டியம்பாக்கம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு கொண்டு சென்றதாகவும், மேலும் பாண்டிச்சேரி S.S. ரெமடி மருத்துவமனைக்கு எடுத்துச்செல்லப்பட்டு அங்கு அவருக்கு அறுவை சிகிச்சை செய்து ப்ளேட் பொருத்தப்பட்டது. விபத்திற்கு 1ஆம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநரின் கவனக்குறைவும், அதிவேகமும், அஜாக்ரதையும்தான் காரணம். விபத்து குறித்து பாண்டிச்சேரி போக்குவரத்து மேற்கு காவல் நிலையத்தில் குற்ற எண்.150/2021 என்னும் வழக்கை பிரிவுகள் 279,337,338 இ.த.ச.வின்படி 1ஆம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநருக்கு எதிராக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது. எனவே இந்த மனுவின் மனுதாரர் தனக்கு ஏற்பட்ட காயங்கள் குறித்து இழப்பீடாக முறையே ரூ.10,00,000/- வழங்க கோரியுள்ளார்.

3.1ஆம் எதிர்மனுதாரின் எதிருரையின் சுருக்கம் :-

மனுவில் கூறப்பட்டுள்ளவை சரியானவை அல்ல. இம்மனு செலவுத்தொகையுடன் தள்ளுபடிக்குரியது. மனுதாரரே அதனை நிரூபிக்க கடமைப்பட்டவர் ஆவார். இதன் கீழ் வெளிப்படையாக ஒப்புக்கொள்ளப்பட்ட குற்றச்சாட்டுகளைத் தவிர, மனுவில் உள்ள மற்ற அனைத்து குற்றச்சாட்டுகளும் பொய்யானவை மற்றும் தவறானவை. 1ம் எதிர்மனுதாரர் வாகனம் 2ம் எதிர்மனுதாரர் காப்பீடு நிறுவனத்திடம் முறையாக காப்பீடு செய்யப்பட்டுள்ளது. விபத்திற்கு 1ஆம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநரின் கவனக்குறைவு காரணம் என்பது மறுக்கப்படுகிறது. 1ம் எதிர்மனுதாரருக்கு எதிராக இழப்பீடு கோரும் நோக்கத்திற்காக, 1ம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான PY05X7525 என்ற எண் கொண்ட வாகனம் விபத்து வழக்கில் பொய்யாக சிக்கவைக்கப்பட்டுள்ளது. 1ம் எதிர்மனுதாரர் கார் இந்த விபத்தில் சம்பந்தப்படவில்லை. மேலும், மனுதாரர் PV055265 என்ற பதிவு எண் கொண்ட இருசக்கர வாகனத்தில் பின் இருக்கை பயணியாகப் பயணம் செய்ததாகவும், விபத்து நடந்த நேரத்தில், அந்த இருசக்கர வாகன ஓட்டுநர், இரண்டு பின் இருக்கை பயணிகளுடன் தனது வாகனத்தை அஜாக்கிரதையாக ஓட்டி, தனது வாகனத்தின் கட்டுப்பாட்டை இழந்து சாலையில் விழுந்து காயமடைந்ததாகவும், மனுதாரருக்கு ஏற்பட்ட காயங்கள் விபத்துடன் தொடர்பில்லாத வேறு இடத்தில் நிகழ்ந்தவை. இருசக்கர வாகனத்திற்கு காப்பீடு இல்லாததால், மனுதாரர் ஒரு கதையைக் கட்டிவிட்டு, 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் மீது வழக்கை புனைந்துள்ளார். இருசக்கர வாகனத்தின் உரிமையாளரையும், காப்பீடு நிறுவனத்தையும் இவ்வழக்கில் தரப்பினர்களாக சேர்த்திருக்க வேண்டும். அவசியதரப்பினர்களை சேர்க்காத தோஷத்தால் இம்மனு பாதிக்கப்பட்டுள்ளது. முதல் தகவல் அறிக்கை 5 நாட்கள் காலதாமதமாக பதிவு செய்யப்பட்டுள்ளது. காவல்துறை அதிகாரிகள் முறையான விசாரணை ஏதுமின்றி முதல் தகவல் அறிக்கை (FIR) பதிவு செய்து, 2ம் எதிர்மனுதாரர் வாகனத்தைப் பறிமுதல் செய்து, 29.12.2009 அன்று மோட்டார் வாகன ஆய்வுக்காக (MVI) எடுத்துச் சென்று அறிக்கை பெற்றுள்ளனர். அந்த அறிக்கையில், 1ம் எதிர்மனுதாரரின் காருக்கு எந்தவிதமான சேதங்களும் இல்லை என குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே மனுதாரருக்கு 1ஆம் எதிர்மனுதாரர் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல. எனவே இம்மனு இந்த எதிர்மனுதாரரின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்படவேண்டும். மனுதாரரின் வயது, காயம், சிகிச்சை, தொழில், வருமானம், இழப்பு பற்றி கூறப்பட்டுள்ளவை மறுக்கப்படுகிறது. அவற்றை மனுதாரர் ஆவணங்கள் மூலம் நிரூபிக்க கடமைப்பட்டவர் ஆவார். கோரியுள்ள இழப்பீடு அதிகமானது. எனவே மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும்.

4. 2 ஆம் எதிர்மனுதாரின் எதிருரையின் சுருக்கம் :-

மனுவில் கூறப்பட்டுள்ளவை சரியானவை அல்ல. இம்மனு நிலைக்கத்தக்கதல்ல. மனுவில் கூறியுள்ளவாறு விபத்து நடைபெறவில்லை. மாண்புமிகு நீதிமன்றத்தின் அழைப்பாணைக்குப் பிறகு, 2ம் எதிர்மனுதாரர் உரிமைகோரலைப் பதிவுசெய்து, அதனை விசாரிக்க புலனாய்வாளர் திரு.அழகுவேலை நியமித்தார். மேற்கு புதுச்சேரி போக்குவரத்துத் துறையால் முதல் தகவல் அறிக்கை எண்.150/2021-ல் இந்த விபத்து பெறப்பட்டு பதிவு செய்யப்பட்டுள்ளது. தங்கள் புலனாய்வாளர், மேலே குறிப்பிடப்பட்ட முகவரியில் 1ம் எதிர்மனுதாரரை சந்தித்து, 22/08/2021 அன்று இரவு சுமார் 09.15 மணியளவில், திருபுவனையில் உள்ள பஜாஜ் ஷோரூமிற்கு எதிரே விழுப்புரம் - பாண்டிச்சேரி பிரதான சாலையில் நிகழ்ந்த விபத்து குறித்து விசாரித்தார். 1ம் எதிர்மனுதாரர் விபத்து நடந்த தேதியை உறுதிப்படுத்தியதாகவும், மேலும் 1ம் எதிர்மனுதாரர் வாகனத்திற்கு முன்னால் சென்று கொண்டிருந்த PY05J7911 என்ற பதிவு எண் கொண்ட இருசக்கர வாகனத்தின் மீது தனது வாகனம் மோதியதாகவும், கூறப்படும் அந்த விபத்தில் இருசக்கர வாகனத்தின் ஓட்டுநர் மற்றும் பின்னால் அமர்ந்து பயணித்தவர் இருவரும் ஆண்கள் ஆவார்கள். விபத்து நடந்த இடத்தில் சாலை விளக்கு இல்லை. PY05J7911 என்ற பதிவு எண் கொண்ட எதிரே வந்த இருசக்கர வாகனத்திற்கும் தனது வாகனத்திற்கும் இடையே இருந்த இடைவெளியை கவனிக்கத் தவறி, அந்த வாகனத்தின் பின்னால் வேகமாகப் பாய்ந்ததாகவும், தனது கவனக்குறைவின் காரணமாகவே விபத்து நிகழ்ந்தது. விபத்து நடந்த இடத்திலிருந்து சுமார் 150 மீட்டர் தொலைவில் கூட்டம் இருந்ததாகவும், மோட்டார் சைக்கிளில் பயணித்த மூன்று நபர்கள் தங்களது சொந்த கவனக்குறைவால் இருசக்கர வாகனத்திலிருந்து கீழே விழுந்து காயமடைந்தனர் என்பது சமீபத்தில் தமக்குத் தெரியவந்ததாகவும் 1ம் எதிர்மனுதாரர் கூறியுள்ளார். உண்மையான புகார்தாரர் அந்தச் சூழ்நிலையைப் பயன்படுத்தி புதுச்சேரி மேற்குப் போக்குவரத்துத் துறையிடம் புகார் அளித்துள்ளார். மேலும், தனது புகாரில், எதிர்வாதியின் வாகனம் ஒன்று தங்கள் மீது மோதி விபத்தை ஏற்படுத்தி, தங்களுக்குக் காயங்களை விளைவித்ததாக அவர் சித்தரித்துள்ளார். உண்மையான புகார்தாரரான எழுமலையின் மகன் திவாகர்ராஜ் அளித்த புகாரில் குறிப்பிடப்பட்டுள்ள விபத்தின் தன்மை பொய்யானது மற்றும் இட்டுக்கட்டப்பட்டது. திவாகர்ராஜ், சுஸ்மிதா மற்றும் தனலட்சுமி ஆகியோர் அவரது வாகனத்தால் காயமடையவில்லை என்று 1ம் எதிர்மனுதாரர் புதுச்சேரி மேற்கு போக்குவரத்துத் துறைக்குத் தெரிவித்தார். தொடர்புடைய அனைத்து வழக்குகளின் அறிக்கையைப் பெற்ற பின்னரும், 1ம் எதிர்மனுதாரரின் உறுதிப்படுத்தலுக்குப் பின்னரும், PY05J7911 என்ற TP வாகனத்தின் ஓட்டுநர் மற்றும் பின்னால் அமர்ந்து பயணித்தவர் புதுச்சேரி நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்த கோரிக்கை இந்த எதிர்மனுதாரரால் தீர்த்து

N VENKATESAN Digitally signed by N VENKATESAN Date: 2026.07.30 17:35:21 +0530

வைக்கப்பட்டது. விபத்து சமயத்தில் 1ம் எதிர்மனுதாரர் வாகனம் 2 ஆம் எதிர்மனுதாரர் காப்பீடு நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டிருந்தது என்பது மறுக்கப்படுகிறது. எனவே இம்மனு இந்த எதிர்மனுதாரரின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்படவேண்டும். மனுதாரரின் வயது, காயம், சிகிச்சை, தொழில், வருமானம், இழப்பு பற்றி கூறப்பட்டுள்ளவை மறுக்கப்படுகிறது. அவற்றை மனுதாரர் ஆவணங்கள் மூலம் நிரூபிக்க கடமைப்பட்டவர் ஆவார். கோரியுள்ள இழப்பீடு அதிகமானது. எனவே மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும்.

5. <u>மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினைகள் யாதெனில்</u>:-

1. விபத்து 1ஆம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநரின் அதிவேக மற்றும் கவனக்குறைவால் ஏற்பட்டதா?

2. மனுதாரர் இழப்பீடு பெற உரியவரா, உரியவராயின் இழப்பீடு யாரால் செலுத்தப்படவேண்டும்?

3. மனுதாரருக்கு இழப்பீட்டு தொகை எவ்வளவு?

6. மனுதாரர் தரப்பில், மனுதாரர் தனலக்ஷ்மி ம.சா.1 சாட்சி விசாரிக்கப்பட்டு, ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.11 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. 1ம் எதிர்மனுதாரர் கோதண்டபாணி எ.ம.சா.1-ஆக விசாரிக்கப்பட்டு, சான்றாவணங்கள் எதுவும் முன்னிடப்படவில்லை. 2ம் எதிர்மனுதாரர் காப்பீடு நிறுவனத்தில் கள ஆய்வாளராக பணிபுரியும் அழகுவேல் எ.ம.சா.2-ஆக விசாரிக்கப்பட்டு, எ.ம.சா.ஆ.1 சான்றாவணம் குறியீடு செய்யப்பட்டுள்ளது. விழுப்புரம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை மருத்துவக்குழு வழங்கியுள்ள ஊனச்சான்றிதழ் அறிக்கை நீ.ம.சா.ஆ.1 ஆக குறியீடப்பட்டுள்ளது.

<u>7. பிரச்சனை 1-க்குரிய தீர்வு</u>:-

(1). அசல் மனு, எதிர் உரை ஆவணங்கள் மற்றும் சாட்சியங்கள் ஆகியவை கவனமுடன் பரிசீலணை செய்யப்பட்டது. மனுதாரர் தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள மனுதாரரான ம.சா.ஆ.1 தனலக்ஷ்மி தனது சாட்சியத்தில் கடந்த 22.08.2021ம் தேதியன்று இரவு சுமார் 9.15 மணியளவில் தானும் தனது சகோதரியான சுஷ்மிதா என்பவரும் சாலையோரமாக PY055265 என்ற எண்கொண்ட இருசக்கர மோட்டார் சைக்கிள் வாகனத்துடன் விழுப்புரம்-பாண்டிச்சேரி சாலையில் திருபுவனை அருகில் நின்றுக்கொண்டிருந்தபோது அச்சமயம் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி வந்துக்கொண்டிருந்த 1ஆம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான PY056X7525 என்ற பதிவெண் கொண்ட கார் வாகனத்தை அதன் ஓட்டுநர் அதிவேகமாகவும்,

N VENKATESAN Digitally signed by N VENKATESAN Date: 2026.07.30 17:35:28 +0530

அஜாக்ரதையாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டிவந்து மனுதாரர் மீது மோதி விபத்து ஏற்பட்டது என்றும், விபத்தில் மனுதாரருக்கு எலும்பு முறிவும் மற்றும் உடல் முழுவதும் பலத்த காயங்களும் ஏற்பட்டது என்றும், விபத்து ஏற்பட்டவுடன் மனுதாரர் விழுப்புரம், முண்டியம்பாக்கம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு கொண்டு சென்றதாகவும், மேலும் பாண்டிச்சேரி S.S. ரெமடி மருத்துவமனைக்கு எடுத்துச்செல்லப்பட்டு அங்கு அவருக்கு அறுவை சிகிச்சை செய்து ப்ளேட் பொருத்தப்பட்டது. விபத்திற்கு 1ஆம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநரின் கவனக்குறைவும், அதிவேகமும், அஜாக்ரதையும்தான் காரணம் என்றும், எனவே எதிர்மனுதாரர்கள் தனக்கு நஷ்டஈடு கொடுக்க வேண்டும் என்றும் சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி சாட்சியம் சம்பத்தகுந்ததாகவும், சந்தேகத்திற்கு அப்பாற்பட்டும் உள்ளதை இந்நீதிமன்றத்தால் அறிய முடிகிறது. இதனை மறுக்கும் விதத்திலும் மற்றும் முறியடிக்கும் விதத்திலும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் எவ்வித கண்ணுற்ற சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை.

(2). முதல் தகவல் அறிக்கை ம.சா.ஆ.1-ஆக குறியிடப்பட்டுள்ளது. மேற்படி விபத்து குறித்து பாண்டிச்சேரி போக்குவரத்து மேற்கு காவல் நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டு 1ஆம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநர் மீது இ.த.ச.பிரிவுகள் 279,337,338-ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ள விபரம் ம.சா.ஆ.1-ன் முன்னிலைக்கு தெரியவருகிறது. மேற்படியான ஆவணத்தில் விபத்து நடந்த தேதி 22.08.2021 என்றும், வழக்கு பதிவு செய்யப்பட்ட நாள் 27.08.2021 என்றும், விபத்து ஏற்படுத்தியது PY056X7525 என்ற பதிவெண் கொண்ட கார் வாகன ஓட்டுநர் என்றும் விபரங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்படி வாகனம் 1ஆம் எதிர்மனுதாரருக்கு சொந்தமானது என்பது ம.சா.ஆ.1,5,6,7 ஆகிய ஆவணங்களை காணும்போது தெரியவருகிறது. மேலும், மேற்கண்ட வாகனத்தின் உரிமையாளர் 1ஆம் எதிர்மனுதாரர் இல்லை என்றோ அந்த வாகனம் விபத்து சமயத்தில் 2ஆம் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை என்றோ 2ஆம் எதிர்மனுதாரரால் ம.சா.1-ன் குறுக்கு விசாரணையின்போது மறுத்துரைக்கப்படவில்லை. மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள முதல் தகவல் அறிக்கை, பதிவுச்சான்றிதழ், காப்பீட்டு சான்றிதழ், ஓட்டுநர் உரிமம், மோட்டார் வாகன ஆய்வறிக்கை ஆகியவற்றை பரிசீலணை செய்ததில் விபத்து ஏற்படுத்தியதாக கூறப்பட்டுள்ள கார் வாகனம் 1ஆம் எதிர்மனுதாரருக்கு சொந்தமானது என்பதும், விபத்து சமயத்தில் மேற்கண்ட வாகனம் 2ஆம் எதிர்மனுதாரர் காப்பீடு நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டு வாகன காப்பீடு நடைமுறையில் இருந்து வந்துள்ளது என்பதும், விபத்து மேற்கண்ட வாகனத்தின் எவ்வித இயந்திரக் கோளாறினாலும் ஏற்படவில்லை என்பதும், மேற்கண்ட வாகனத்தின் ஓட்டுநருக்கு விபத்து

N VENKATESAN Digitally signed by N VENKATESAN Date: 2026.07.30 17:35:35 +0530

சமயத்தில் உரிய ஓட்டுநர் உரிமம் இருந்துள்ளது என்பதும் தெளிவாக தெரியவருகிறது. மனுதாரர் வாகனம் விபத்தில் பாதிக்கப்படவில்லை என்று எதிர்மனுதாரர்களால் எதிர்வாதம் செய்யப்பட்டுள்ள நிலையில் மனுதாரர் இழப்பீடு பெற வேண்டி எதிர்மனுதாரர்களை தரப்பினர்களாக சேர்த்து தவறாக இழப்பீடு பெற முயற்சித்துள்ளதாக கூறியுள்ள எதிர்வாதத்தினை உறுதியூட்ட வேண்டிய சாட்சிய மற்றும் சான்றாவணங்களை முன்னிறுத்த எதிர்மனுதாரர்கள் தவறியுள்ளனர். மனுதாரரின் சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் மனுதாரர் மற்றும் மனுதாரரின் சகோதரியும் விபத்தினால் பாதிக்கப்பட்டுள்ளார்கள் என்பது மிக தெளிவாக காண முடிகிறது. எனவே மனுதாரர் தரப்பு சான்றாவணங்களின் வாயிலாகவும் மேற்படி விபத்தானது 1ஆம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநரின் அலட்சியம், கவனக்குறைவு மற்றும் அஜாக்ரதையால்தான் ஏற்பட்டுள்ளது என்ற விவரம் மனுதாரர் தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளது.

வேறு வாகனம் மோதி மனுதாரருக்கு விபத்து ஏற்பட்டது என்றும், அந்த வாகனத்தின் விவரம் தெரியாததால் 1வது எதிர்மனுதாரர் வாகனத்தை இவ்வழக்கில் காட்டி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், மனுதாரர் சொல்வது போல் நடந்திருந்தால் காருக்கும் சேதாரம் ஏற்பட்டிருக்கும் என்றும், அது போல் ஏதும் ஏற்படவில்லை என்றும், மனுதாரரால் பொய்யாக சாட்சி சொல்லப்பட்டுள்ளது என்றும் 1ஆம் எதிர்மனுதாரர் தரப்பில் வாதிடப்பட்டது. மனுதாரர் சென்ற வண்டியின் ஓட்டுநர் விபத்தை பார்த்து பிரேக் போட்டதால் மனுதாரர் கீழே விழுந்து விட்டார் என்றும், இரு சக்கர வாகன ஓட்டி காரின் கண்ணாடி மீது மோதியதால் கீழே விழுந்தார்கள் என்றும் அவரை கார் இடிக்கவே இல்லை என்றும், கார் எவ்வகையிலும் மனுதாரருக்கு ஏற்பட்ட விபத்துக்கு காரணம் அல்ல என்பதால் காப்பீட்டாளர் இழப்பீடு கொடுக்க முடியாது என்றும், உண்மையில் இந்த காரினால் விபத்தில் பாதிக்கபட்ட முதலில் சென்ற வண்டியின் ஓட்டுநர் மற்றும் பின் பக்கம் அமர்ந்து இருந்தவர்கள் இழப்பீட்டை சட்ட பணிகள் ஆணைக்குழுவிற்கு முன்பாக சமரசமாக தீர்த்து கொண்டு விட்டனர் என்றும், இந்த விபத்திற்கு காப்பீட்டாளர் இழப்பீடு கொடுக்க முடியாது என்றும் 2 ஆம் எதிர்மனுதாரர் தரப்பில் வாதிடப்பட்டது. இருசக்கர வாகனத்தை ஓட்டிய ஓட்டுநரின் கவனக்குறைவு விபத்திற்கு காரணம் அல்ல என்றும், 1ஆம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநரின் கவனக்குறைவால்தான் விபத்து ஏற்பட்டது என்றும்,1ம் எதிர்மனுதாரர் விபத்தை ஏற்படுத்திவிட்டு உடனடியாக நின்று காயம் பட்டவர்களை பார்க்காமல் தப்பிக்க முயன்றுள்ளார் என்பது மனுதாரர் தரப்பு சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் மூலம் தெரியவருகிறது. எனவே மனுவில் கோரியுள்ளவாறு மனுதாரருக்கு இழப்பீடு கிடைக்கத்தக்கது என்றும் மனுதாரர் தரப்பில் வாதிடப்பட்டது.

N VENKATESAN Digitally signed by N VENKATESAN Date: 2026.07.30 17:35:41 +0530

1ம் எதிர்மனுதாரர் கோதண்டபாணி எ.ம.சா.1-ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் தனது சாட்சியத்தில் 22.08.2021 ல் இரவு 9.15 மணியளவில் பாண்டிச்சேரி - விழுப்புரத்திற்கு தனக்கு சொந்தமான PY-05-X-7525 ஆல்டோ காரில் தனது மனைவி மற்றும் குழந்தைகளுடன் வந்து கொண்டிருந்ததாகவும், திருபுவனை பஜாஜ் ஷோரூம் அருகில் வந்து கொண்டிருந்த போது இரண்டு வாலிபர்கள் கையில் இரத்த கறையுடன் தனது காரின் கண்ணாடியில் கை வைத்து தன்னை முந்தி சென்று தனக்கு முன்னர் உள்ள ட்ரான்பாமரில் மோதி கீழே விழுந்து விட்டார்கள் என்றும், கொஞ்சம் தூரம் தள்ளி தனது வாகனத்தை நிறுத்தியதாகவும், அங்கிருந்த பொது மக்கள் தான் இடித்ததாக சண்டை போட்டார்கள் என்றும், தான் இடிக்கவில்லை என சொல்லி வில்லியனூர் காவல் நிலையத்தில் நடந்ததை சொல்லி புகார் எழுதி கொடுத்ததாகவும், பாண்டிச்சேரி நீதிமன்றத்தில் இருந்து எனக்கு 2 அழைப்பாணை வந்தது என்றும் கூறியுள்ளார். ஆனால் அதனை உறுதியூட்ட வேண்டிய சாட்சிய மற்றும் சான்றாவணங்களை முன்னிறுத்த 1ம் எதிர்மனுதாரர் தவறியுள்ளார். அவரது கூற்று நம்பும்படியாக அமையவில்லை.

மனுதாரர் தரப்பு மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிய விசாரணையின் வாயிலாகவும், சான்றாவணங்கள் வாயிலாகவும் மற்றும் குறுக்கு விசாரணையின் வாயிலாகவும் முதல் தகவல் அறிக்கை அம்சங்களையொட்டி சாட்சியம் அளித்துள்ள மனுதாரர்/ம.சா.1, விபத்து 1ம் எதிர்மனுதார் வாகன ஓட்டுநரின் கவனக்குறைவு மற்றும் அஜாக்ரதையால்தான் ஏற்பட்டது என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. முதல் தகவல் அறிக்கை 1ம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநர் மீதுதான் பதிவு செய்யப்பட்டுள்ளது. எனவே 1ம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநரின் கவனக்குறைவால்தான் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது என்று இந்நீதிமன்றம் தீர்மானித்து இப்பிரச்சனைக்கு அவ்வாறே தீர்வு காணப்படுகிறது.

8. பிரச்சனை 2-க்குரிய தீர்வு:-

(1). 2 ம் எதிர்மனுதாரர் காப்பீடு நிறுவனத்தில் கள ஆய்வாளராக பணிபுரியும் அழகுவேல் எ.ம.சா.2-ஆக விசாரிக்கப்பட்டு, எ.ம.சா.ஆ.1 சான்றாவணம் குறியீடு செய்யப்பட்டுள்ளது. அவர் தனது சாட்சியத்தில் 24/02/2023 அன்று தான் விபத்துக்குள்ளான வாகனத்தின் உரிமையாளர் திரு.கோதண்டராமன் அவர்களை நேரில் சந்தித்து விபத்து குறித்து விசாரித்தாகவும், அவர், தனக்குச் சொந்தமான PY-05-X-7525 என்ற பதிவு எண் கொண்ட மாருதி ஆல்டோ காரை கடந்த 22/08/2021 அன்று பாண்டிச்சேரியிலிருந்து விழுப்புரம் நோக்கி ஓட்டிச் சென்றதாகவும், திருபுவனை பஜாஜ் ஷோரூம் அருகில் சென்றபோது, அதே திசையில் வந்த இருசக்கர வாகனம் ஒன்று அவரது காரை முந்த முயன்றதாகவும், அப்போது

காரின் வலது பக்க கதவு கண்ணாடியில் (Right Side Door Glass Window) இருசக்கர வாகனத்தில் வந்தவர்கள் கையை வைத்ததால் நிலைதடுமாறி சாலையில் விழுந்துவிட்டதாகவும், காயமடைந்தவர்கள் ஆண்கள் என்றும், இந்த விபத்தில் பெண்கள் எவருக்கும் காயம் ஏற்படவில்லை என்றும், நீதிமன்ற சம்மன் வந்த பிறகே அவருக்கு விபத்து குறித்துத் தெரிந்ததாகவும், இவ்வழக்கின் மனுதாரர்களுக்கு ஏற்பட்ட காயங்களுக்கும் அவரது காரிற்கும் எந்தவிதச் சம்பந்தமும் இல்லை என்றும், மனுதாரர்களின் காயங்கள் காரினால் ஏற்படவில்லை (Injury to petitioners not due to my car) என்றும் எழுத்துப்பூர்வமான வாக்குமூலத்தை தன்னிடம் அளித்துள்ளார் என்றும், இது குறித்து காவல்துறை கண்காணிப்பாளருக்கு புகார் கடிதம் அனுப்பிருப்பதாகவும் கூறியுள்ளார். மேலும் எ.ம.சா.2 தனது மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணையில் " இந்த வழக்கில் மொத்தம் 2 வாகனங்கள் சம்மந்தப்பட்டுள்ளது என்றும், மோட்டார் வாகன ஆய்வறிக்கை 2 வாகனங்களுக்குத்தான் வழங்கப்பட்டுள்ளது என்றும், எந்த எந்த வாகனங்களுக்கு மோட்டார் வாகன ஆய்வறிக்கை வழங்கப்பட்டுள்ளது என்றால் 3 வாகனங்களுக்கு மோட்டார் வாகன ஆய்வறிக்கை என்னிடம் வழங்கப்பட்டு அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் " என்று கூறியுள்ளார். இதன்படி பார்க்கையில் விபத்தில் பாதிக்கப்பட்ட 3 வாகனங்களுக்குரிய மோட்டார் வாகன ஆய்வறிக்கைகள் தன்னிடம் வழங்கியதாக ஒப்புக்கொண்டுள்ளார். அவ்வாறு எனில் விபத்தில் 3 வாகனங்கள் ஈடுபட்டுள்ளதாக காணமுடிகிறது. 2 ம் எதிர்மனுதாரர் தரப்பு சாட்சியம் நம்பும் வகையில் அமையவில்லை.

மேற்கண்ட பொருண்மைகளையும் மேற்கண்ட எ.ம.சா.1 மற்றும் எ.ம.சா.2-ன் சாட்சியம், மோட்டார் வாகன ஆய்வறிக்கை உள்ளிட்ட சான்றாவணங்களையும் பரிசிலணை செய்ததில் இவ்விபத்து கார் வாகன ஓட்டுநரின் கவனக்குறைவால் ஏற்படவில்லை என்று சாட்சியம் அளித்துள்ளபோதிலும் மனுதாரர் தரப்பு சாட்சியம் மற்றும் ஆவணங்களின் வாயிலாக 1ம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநரின் அலட்சியம், கவனக்குறைவு மற்றும் அஜாக்ரதையால்தான் விபத்து ஏற்பட்டுள்ளது என்ற விவரம் மனுதாரர் தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளது என்றே இந்நீதிமன்றம் முடிவு காண்கிறது.

(2). பிரச்சனை-1க்கு 1ஆம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநரின் கவனக்குறைவே விபத்திற்கு காரணம் என்று தீர்வு காணப்பட்டுள்ளது. எனவே மனுதாரர் இழப்பீடு பெற அருகதையுடையவர். எனவே மேற்சொன்ன காரணங்களால் 1ஆம் எதிர்மனுதாரரின் வாகனத்தின் காப்பீட்டாளர் 2 ஆம் எதிர்மனுதாரர் என்பதால் மனுதாரருக்கான இழப்பீட்டை 2 ம் எதிர்மனுதாரர் வழங்க வேண்டுமென்று பிரச்சனை-2 க்கு தீர்வு காணப்படுகிறது.

N VENKATESAN
Digitally signed by N VENKATESAN
Date: 2026.07.30 17:35:54 +0530

9. பிரச்சனை 3-க்குரிய தீர்வு:-

(1). மனுதாரருக்கு அடிப்பட்டவுடன் பாண்டிச்சேரி, ஜிப்மர் மருத்துவமனையில் 26.08.2021 தேதி முதல் 03.09.2021 தேதி வரை உள்நோயாளியாக சிகிச்சை மேற்கொண்டுள்ளார் என்பதும், சிகிச்சைக்கு சென்றபோது மனுதாரருக்கு right closed shaft of femur fracture with right closed trimalleolar fracture ஏற்பட்டுள்ளது என்பதும், மனுதாரருக்கு விபத்தில் ஏற்பட்ட எலும்பு முறிவிற்கு 03.09.2021 தேதியில் அறுவை சிகிச்சை செய்யப்பட்டுள்ள விவரமும் ம.சா.ஆ.2 விடுவிப்புச்சான்றிதழிலிருந்து தெரியவருகிறது.

(2). தி ப்ரான்ச் மேனேஜர், டாடா ஏஜஜி ஜெனரல் இன்சூரன்ஸ் கம்பனி லிமிடெட் எதிர் பிரபு மற்றும் ஒருவர் (C.M.A.No.2380-15-2016(1) TN MAC 609) வழக்கில் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவை பின்பற்றி இந்நீதிமன்ற வேண்டுகோளின் பேரில் விழுப்புரம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை மருத்துவர் குழு மனுதாரரை பரிசோதித்து நீ.ம.சா.ஆ.1 ஊனச்சான்றிதழை இந்நீதிமன்றத்திற்கு அனுப்பியுள்ளது. அந்த ஊனச்சான்றிதழில் மனுதாரரை பரிசோதித்ததில், மனுதாரருக்கு விபத்தில் ஏற்பட்ட right shaft femur fracture, right closed traumatic ORIF nailing காயங்களின் விளைவாக மொத்தம் 10% நிரந்தர ஊனம் ஏற்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே அதன் அடிப்படையில் மனுதாரருக்கு 10% நிரந்தர ஊனம் ஏற்பட்டுள்ளது என இத்தீர்ப்பாயம் தீர்மானித்து கீழ்கண்டவாறு இழப்பீடு கணக்கிடப்படுகிறது.

10. ஊனத்திற்கான இழப்பீடு :-

இந்நிலையில் விபத்து சமயத்தில் மனுதாரரின் வயது 19 என்று மனுவில் கூறியுள்ள நிலையில், மனுதாரரின் ஆதார் அட்டையில் மனுதாரரின் பிறந்த தேதி 09.05.2004 என்று குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே மனுதாரருக்கு விபத்து சமயத்தில் பூர்த்தியடைந்த வயது 17 என்று தீர்மானிக்கப்படுகிறது. தற்போதையை வாழ்க்கை செலவின அடிப்படையில் நேஷனல் இன்சுரன்ஸ் கம்பெனி லிமிடெட் எதிர் ஜி.ரமேஷ் மற்றும் ஒருவர் (2013 (2) TN MAC 583) வழக்கில் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் நிரந்தர ஊனத்தை பொறுத்தும், வருமானத்தை பொறுத்தும் இழப்பீட்டுத் தொகை கருத்தில்கொள்ளவேண்டும் என்று தீர்ப்பளித்துள்ளது. மேலும் மனுதாரருக்கு 22.08.2021 தேதியில் ஏற்பட்ட right shaft femur fracture, right closed traumatic ORIF nailing காயங்களினால் மனுதாரருக்கு 10% நிரந்தர ஊனம் ஏற்பட்டுள்ளதால் மனுதாரரின் காயம் மற்றும் ஊனம் வயது ஆகியவற்றையும் அப்போதைய பணமதிப்பு ஆகியவற்றையும் கணக்கில்கொண்டு ஊனத்திற்கான

இழப்பீட்டுத் தொகையை 1 சதவீதத்திற்கு ரூ.7,000/-என மாண்புமிகு உயர்நீதிமன்றம், சென்னை **M. Pradeep Vs. N. Natarajan and TATA AIG Geneal Insurance Company Ltd., in C.M.A.1759/2023**, Dated-**31.01.2024**-ல் வழங்கிய தீர்ப்பின்படி ரூ.7,000/- வழங்குவது சரியானதாக இருக்கும் என இந்நீதிமன்றம் தீர்மானித்து (10x7,000) = ரூ.70,000/- மனுதாரருக்கு நிரந்தர ஊனத்திற்காக கிடைக்கதக்கது என்று தீர்மானிக்கப்படுகிறது.

<u>11. மனவலி மற்றும் வேதனைக்காக :-</u>

மனுதாரருக்கு விபத்தில் வலது காலில் எலும்பு முறிவு ஏற்பட்டு 9 நாட்கள் சிகிச்சை எடுத்துள்ளார். மேலும் மனுதாரருக்கு 10% நிரந்தர ஊனம் ஏற்பட்டுள்ளது. மேலும் மனுதாரருக்கு 1 அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மனுதாரர் பெண் என்பதாலும், மனுதாரருக்கு விபத்தினால் ஏற்பட்ட மேற்படி காயங்களுக்காக அதிகபடியான மனவலியும், உடல் வலியும், வேதனையும் ஏற்பட்டுள்ளதால் காயத்தின் தன்மையை கருத்தில்கொண்டு ரூ.50,000/- மனவலி மற்றும் வேதனைக்காக கிடைக்கதக்கது என்று தீர்மானிக்கப்படுகிறது.

<u>12. வருமான இழப்பு :-</u>

விபத்தின்போது மனுதாரர் நர்சிங் படித்து வந்ததாகவும், மேற்படி விபத்திற்கு பிறகு தன்னால் முன்பு இருந்தது போல் சரிவர வேலைகளை செய்ய முடியவில்லை என்றும், தான் நர்சிங் படித்து முடித்த பிறகு தன்னால் வேலைக்கு எங்கும் செல்ல முடியவில்லை என்றும் ம.சா.ஆ.1-ஆல் கூறப்பட்டுள்ளது. எனினும் மனுதாரரின் படிப்பு குறித்து எந்த ஆதாரமும் முன்னிலைப்படுத்தப்படவில்லை. மனுதாரர் வருமான இழப்பு ஏற்பட்டதாக கூறவில்லை. எனவே விபத்து காயத்தினால் மனுதாரருக்கு வருமான இழப்பு ஏற்படவில்லை என்பதால் இதுகுறித்து எவ்வித தொகையும் பெற மனுதாரர் உரியவர் அல்ல என்று தீர்மானிக்கப்படுகிறது.

<u>13. ஊட்டச்சத்து :-</u>

மனுதாரர் சிகிச்சையிலிருந்தபோதும், சிகிச்சைக்காக பின்னிட்டு விபத்து காயங்களை ஆற்றுவதற்காக அதிகப்படியான ஊட்டச்சத்துள்ள உணவுகளை எடுத்துக்கொண்டுள்ள சூழ்நிலைக்கு ஆளாகியுள்ளார். அந்த வகையில் அவர் ஊட்டச்சத்துணவு எடுத்துக்கொண்ட வகையில் அவருக்கு ஊட்டச்சத்துணவிற்காக ரூ.40,000/- இழப்பீடாக வழங்கி உத்தரவிடப்படுகிறது.

<u>14.ஆடை சேத மதிப்பு :-</u>

மனுதாரருக்கு விபத்தின்போது அணிந்திருந்த ஆடை சேதத்திற்காக ரூ.2,000/- இழப்பீடாக வழங்கி உத்தரவிடப்படுகிறது.

N VENKATESAN Digitally signed by N VENKATESAN Date: 2026.07.30 17:36:06 +0530

15. போக்குவரத்து :-

விபத்து ஏற்பட்டவுடன் மனுதாரர் போக்குவரத்து மூலம் மருத்துவமனைக்கு எடுத்துச்செல்லப்பட்டார் என்பதற்கான உறுதியூட்டப்பட்ட சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் எதுவும் முன்னிலைப்படுத்தப்படவில்லை. இருப்பினும் விபத்து ஏற்பட்ட இடம், சிகிச்சை மேற்கொண்ட மருத்துவமனை ஆகியவற்றை கருத்தில்கொண்டு போக்குவரத்து ரூ.25,000/- கிடைக்கத்தக்கது என தீர்மானிக்கப்படுகிறது.

16. மருத்துவ பில்கள் :-

மனுதாரருக்கு மருந்து வாங்கியதற்காகச் செலவு ஏற்பட்டதாக மனுதாரரால் கூறப்பட்டிருந்தாலும், அதுகுறித்து எவ்வித மருந்து ரசீதுகளும் மனுதாரரால் தாக்கல் செய்யப்படவில்லை என்பதால் எவ்வித தொகையும் மனுதாரருக்கு இந்தத் தலைப்பில் கிடைக்கதக்கதல்ல என்று தீர்மானிக்கப்படுகிறது.

17. உதவியாளர் ஊதியம் :-

மனுதாரர் சிகிச்சைப் பெற்ற காலங்களில் அவருடன் உதவிக்கு ஒருவர் இருந்து இருக்க கூடும். அவருக்கான செலவை மனுதாரர் மேற்கொண்டிருப்பார். எனவே மனுதாரருக்கு உதவியாளர் தொகையாக ரூ.30,000/- கிடைக்கத்தக்கது எனத் தீர்மானிக்கப்படுகிறது.

ஊனத்திற்கு	ரூ.	70,000
வலி, மனவேதனை	ரூ.	50,000
ஊட்டச்சத்து	ரூ.	40,000
ஆடை சேதாரத்திற்காக	ரூ.	2,000
போக்குவரத்து செலவுக்காக	ரூ.	25,000
உதவியாளர் ஊதியம்	ரூ.	30,000
மொத்த ம்	ரூ.	2,17,000

மேற்கண்டவாறு மனுதாரருக்கு மொத்தம் ரூ.2,17,000/- (ரூபாய் இரண்டு இலட்சத்து பதினேழாயிரம் மட்டும்) ஒட்டுமொத்த இழப்பீடாகக் கிடைக்கத்தக்கது எனத் தீர்மானிக்கப்படுகிறது.

16. இறுதியாக, இம்மனு பகுதியாக செலவுத்தொகையுடன் அனுமதிக்கப்படுகிறது. மனுதாரருக்கு 2 ம் எதிர்மனுதாரர் ஒட்டுமொத்த இழப்பீடாக ரூ.2,17,000/- (ரூபாய் இரண்டு

இலட்சத்து பதினேழாயிரம் மட்டும்)-மும் மனு தாக்கலான தேதி முதல் தொகை செலுத்தும் காலம் வரை வருடத்திற்கு 7.5 சதவிகித வட்டியுடன் இன்றிலிருந்து 2 மாத காலத்திற்குள் செலுத்த வேண்டுமென உத்தரவிடப்படுகிறது.

PARMINDER SINGH VS HONEY GOYAL AND OTHERS (S.L.P.No.(c) No.4484 of 2020) Dated-18.03.2025 வழக்கில் மாண்புமிகு உச்ச நீதிமன்றம் அறித்த தீர்ப்பின்படியும் மற்றும் The Hon'ble Court, Madras in ROC.No.55584/2025/S.Ct., dated 02.07.2025 மாண்புமிகு உயர் நீதிமன்றத்தின் வழிகாட்டியின்படியும், மேற்படி ரூ.2,17,000/- இழப்பீட்டு தொகையை 2ம் எதிர்மனுதாரர் மனுதாரரின் Name – Dhanalakshmi, Indian Overseas Bank, Tirubuvanai, A/c.No.17050100014596, IFSC No.IOBA0001705 நேரடியாக வங்கி பண மாற்று முறையான NEFT அல்லது RTGS ஆகிய E-Transfer முறையில் செலுத்தவேண்டும் என உத்தரவிடப்படகிறது.

TN MACT விதிகள் 1989 இன் விதி 20 துணை விதி 4-ன் படி, மனுதாரர் தனது வழக்கறிஞருக்கு பணம் செலுத்த ரூ.14,350/- வழக்கறிஞர் கட்டணம் நிர்ணயிக்கப்படுகிறது. வழக்கறிஞர் கட்டணம் ரூ.14,350/-, மனுதாரர் செலுத்திய நீதிமன்றக்கட்டணம் ரூ.373/- மற்றும் செலவுத் தொகை ரூ.109/-ஆக மொத்தம் ரூ.14,832/-ஐ 2ம் எதிர்மனுதாரர் மனுதாரரின் Name – Dhanalakshmi, Indian Overseas Bank, Tirubuvanai, A/c.No.17050100014596, IFSC No.IOBA0001705 நேரடியாக வங்கி பண மாற்று முறையான NEFT அல்லது RTGS ஆகிய E-Transfer முறையில் செலுத்தவேண்டும் என உத்தரவிடப்படுகிறது.

மனுதாரர் செலுத்தவேண்டிய மொத்த நீதிமன்ற கட்டணம் ரூ.1,543/- மனுதாரர் நீதிமன்றக் கட்டணமாக ரூ.373/- செலுத்தியுள்ளார். மனுதாரர் செலுத்தவேண்டிய இழப்பீடு தொகைக்குரிய குறைவு நீதிமன்றக்கட்டணம் ரூ.1,170/- ஆகும். மனுதாரர் செலுத்த வேண்டிய குறைவு நீதிமன்றக் கட்டணம் ரூ.1,170/-ஐ 2ம் எதிர்மனுதாரர் தீர்ப்பு வழங்கப்பட்ட நாளிலிருந்து 15 நாட்களுக்கு E-Court fees link pay.ecourts.gov.in என்ற இணையதளத்தின் மூலம் செலுத்த வேண்டுமென உத்தரவிடப்படுகிறது.

மேற்படி இழப்பீட்டு தொகை, வழக்கறிஞர் ஊதியம், வழக்குச் செலவு தொகை, குறைவு நீதிமன்ற கட்டணம் செலுத்தியதற்கான ரசீதை 2ம் எதிர்மனுதாரர் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய வேண்டும் என்றும் உத்தரவிடப்படுகிறது.

வழக்கு தரப்பினர்களுக்கு சான்றிடப்பட்ட தீர்ப்பு நகல் இலவசமாக வழங்க உத்தரவிடப்படுகிறது.

N VENKATESAN
Digitally signed by N VENKATESAN
Date: 2026.07.30 17:36:19 +0530

செலவுத் தொகை பட்டியல்

	மனுதாரர்	ரூ.	2 ம்எதிர்மனுதாரர்	ரூ.
1.	வக்காலத்து	10.00		
2.	படிசெலவு	44.00		
3.	ஆவணங்கள் மீது ஸ்டாம்பு	55.00		
4.	நீதிமன்ற கட்டணம்	1,543.00		
5.	வழக்கறிஞர் கட்டணம்	14,350.00		
	மொத்தம்	16,002.00		

இவ்வுத்தரவானது சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு பிழைத்திருத்தம் செய்து இன்று 2026 ம் ஆண்டு ஜூலை மாதம் 28-ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

N VENKATESAN Digitally signed by N VENKATESAN Date: 2026.07.30 17:36:25 +0530

சிறப்பு சார்பு நீதிபதி எண்.1,
(மோட்டார் வாகன விபத்து இழப்பீடு கோருரிமை வழக்கு)
சிறப்பு சார்பு நீதிமன்றம் எண்.1, விழுப்புரம்.

மனுதாரர் தரப்பு சாட்சி:-

ம.சா.1 - தனலக்ஷ்மி

மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்:-

ம.சா.ஆ.1	27.08.2021	முதல் தகவல் அறிக்கை.	ஒளி நகல்.
ம.சா.ஆ.2	22.08.2021	பாண்டிச்சேரி, ஜிப்மர் மருத்துவமனையால் வழங்கப்பட்ட விபத்து பதிவேடு.	ஒளி நகல்.
ம.சா.ஆ.3	-	பாண்டிச்சேரி, வெங்கடேஸ்வரா மருத்துவமனையால் வழங்கப்பட்ட சிகிச்சை குறிப்பு ஆவணம்.	ஒளி நகல்.
ம.சா.ஆ.4	-	சி.டி.ஸ்கேன் ரிப்போர்ட்.	ஒளி நகல்.
ம.சா.ஆ.5	-	1 ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் பதிவு சான்றிதழ்.	ஒளி நகல்.

ம.சா.ஆ.6	-	1ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் காப்பீட்டு சான்றிதழ்.	ஒளி நகல்.
ம.சா.ஆ.7	-	1ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை.	ஒளி நகல்.
ம.சா.ஆ.8	-	PY055265 என்ற வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை.	ஒளி நகல்.
ம.சா.ஆ.9	-	1ம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநரின் ஓட்டுநர் உரிமம்.	ஒளி நகல்.
ம.சா.ஆ.10	-	மனுதாரரின் ஆதார் அட்டை.	ஒளி நகல்.
ம.சா.ஆ.11	-	மனுதாரரின் வங்கி கணக்கு புத்தகத்தின் முதல் பக்கம்.	ஒளி நகல்.

எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள்:-

எ.ம.சா.1 .. கோதண்டராமன்

எ.ம.சா.2 .. அழகுவேல்

எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள் :-

எ.ம.சா.ஆ.1	-	புலனாய்வு அறிக்கை.	ஒளி நகல்.

நீதிமன்ற சான்றாவணம்:-

நீ.ம.சா.ஆ.1	-	விழுப்புரம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவர் குழு வழங்கிய ஊனச்சான்றிதழ்/அறிக்கை.

N VENKATESAN
Digitally signed by N VENKATESAN
Date: 2026.07.30 17:36:32 +0530

சிறப்பு சார்பு நீதிபதி எண்.1,

(மோட்டார் வாகன விபத்து இழப்பீடு கோருரிமை வழக்கு)

சிறப்பு சார்பு நீதிமன்றம் எண்.1, விழுப்புரம்.